


# 27.04.2026 செய்திகள்

## இந்தியா-நியூசிலாந்து வர்த்தக ஒப்பந்தம்

» கையெழுத்து

- இந்தியா இதுவரை ஐக்கிய அரபு அமீரகம், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஓமன், ஐரோப்பிய ஒன்றியம், மொரீஷியஸ் ஆகிய நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்துள்ளது. இவற்றில் சில ஒப்பந்தங்கள் அமலுக்கு வந்துவிட்டன.
- டெல்லி பாரத் மண்டபத்தில், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை மந்திரி பியூஸ் கோயல், நியூசிலாந்து வர்த்தகம் மற்றும் முதலீட்டுத்துறை மந்திரி டோட் மெக்லே ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்து ஆகிறது.

» 95 சதவீத பொருட்களுக்கு வரி ரத்து

- இந்தியா-நியூசிலாந்து இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை 5 ஆண்டுகளில் இரட்டிப்பு ஆக்குவதே ஒப்பந்தத்தின் நோக்கம் ஆகும்.
- இதன்படி, இந்தியாவுக்கு நியூசிலாந்து ஏற்றுமதி செய்யும் கம்பளி, நிலக்கரி, செம்மறி ஆட்டு இறைச்சி, மரப்பொருட்கள், ஒயின், கிவி பழங்கள், புளூபெர்ரி உள்பட 95 சதவீத பொருட்களுக்கு வரி ரத்து செய்யப்படும் அல்லது குறைக்கப்படும்.
- ஆனால், இந்திய விவசாயிகள் மற்றும் உள்நாட்டு தொழில்துறையை பாதுகாப்பதற்காக, நியூசிலாந்தின் பால் பொருட்கள், வெங்காயம், சர்க்கரை, மசாலா பொருட்கள், சமையல் எண்ணெய், ரப்பர் போன்றவற்றுக்கு இந்தியா எந்த சலுகையும் அளிக்காது.

» 2 ஆயிரம் கோடி டாலர்

- மூக்கடலை, பட்டாணி, மக்காச்சோளம், பாதாம், செயற்கை தேன், விலங்கு மற்றும் தாவர கொழுப்பு, ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள், நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள், தாமிரம் மற்றும் அதன் பொருட்கள், அலுமினிய பொருட்கள் ஆகியவை இந்த ஒப்பந்தத்தில் அடங்காது.
- அடுத்த 15 ஆண்டுகளில், இந்தியாவில் உற்பத்தி, உள்கட்டமைப்பு, சேவைகள், புத்தாக்கம், வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றில் 2 ஆயிரம் கோடி டாலர் முதலீடு செய்ய நியூசிலாந்து உறுதிபூண்டுள்ளது.
- சேவைத்துறையை பொறுத்த வரை திறன்சார்ந்த பணிகளில் இந்திய தொழில்நுட்ப பணியாளர்களுக்கு நியூசிலாந்து தற்காலிக வேலைவாய்ப்பு விசா வழங்கும். ஆண்டுக்கு 5 ஆயிரம் விசா ஒதுக்கீடு செய்யப்படும். 3 ஆண்டுகள் வரை தங்கி இருக்கலாம்.

» கிவி பழங்கள்

- இந்திய ஆயுஷ் மருத்துவர்கள், யோகா பயிற்சியாளர்கள், இந்திய சமையல் கலைஞர்கள், இசை ஆசிரியர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம், என்ஜினீயரிங், சுகாதாரம், கல்வி, கட்டுமானம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த விசா சலுகை கிடைக்கும்.
- மேலும் ஒப்பந்தத்தின்கீழ், கிவி பழம், ஆப்பிள், தேன் ஆகியவை தொடர்பான வேளாண் தொழில் நுட்பசெயல் திட்டத்தை நியூசிலாந்து அமைக்கும்.

SURESH'

- மருந்து பொருட்கள், மருத்துவ சாதனங்கள் ஆகியவற்றை நியூசிலாந்துக்கு இந்தியா ஏற்றுமதி செய்வது அதிகரிக்க இந்த ஒப்பந்தம் உதவும். இந்திய பொருட்கள் வரியின்றி நியூசிலாந்து சந்தையில் நுழைய முடியும்.

» பியூஸ்கோயல் பேட்டி

- ஒப்பந்தத்தில் கையெழுத்திட நியூசிலாந்து வர்த்தகம் மற்றும் முதலீட்டுத்துறை மந்திரி டோட் மெக்லே, தனது மனைவியுடன் இந்தியா வந்துவிட்டார்.
- நேற்று இருவரும் மத்திய மந்திரி பியூஸ் கோயலுடன் தாஜ்மகாலை சுற்றி பார்த்தனர். இரு மந்திரிகளும் தொழில் அதிபர்களை அழைத்துப் பேசினர்.
- பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த பியூஸ் கோயல், 'இந்தியாவில் இருந்து நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி இருக்காது.
- இது, ஆக்ராவைச் சேர்ந்த தோல் ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட உள்நாட்டு நிறுவனங்களுக்கு நல்ல வாய்ப்பாக அமையும்' என்று கூறினார்.

## தமிழகம், மேகாலயத்தில் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்தத் திட்டம்

- பல்லுயிர் பெருக்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் இந்த 5 ஆண்டு கால திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை பசுமையாக்குதல், நிதி ஒதுக்கீடுகள் மூலம் உள்ளூர் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அதிகாரமளித்து இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- ஊராட்சி (பஞ்சாயத்து) அமைப்புகள் மற்றும் பல்லுயிர் மேலாண்மைக் குழுக்களை வலுப்படுத்துவதற்காக, உள்ளூர் வளர்ச்சித் திட்டங்களில் பல்லுயிர் பெருக்க நடவடிக்கைகளையும் இணைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- வனத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளிட்டோரை ஒன்றிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்பு (சிஎஸ்ஆர்)மற்றும் நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்கும் பசுமை குறுந்தொழில்கள் ஆகிவற்றை செயல்படுத்தி நிதி வழிமுறைகளை ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள் சங்கமிக்கும் தமிழகத்தின் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்திலும், மேகாலயத்தின் காரோ மலைகளிலும் இத்திட்டம் தொடங்கப்பட உள்ளது.
- மத்திய அரசு, உலகளாவிய சுற்றுச்சூழல் அமைப்பு, ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத்திட்டம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- இதற்கென 2025-2030 காலகட்டத்துக்கு ரூ.46 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

## பிரபல புகைப்படக் கலைஞர் ரகு ராய்

- 1942-ஆம் ஆண்டு மேற்கு பஞ்சாபில் (தற்போது பாகிஸ்தானில் உள்ளது) உள்ள ஜாங் பகுதியில் பிறந்த ரகு ராய், பொறியியலாளராகத் தேர்ச்சி பெற்றபோதிலும் புகைப்பட கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.
- 1966-ஆம் ஆண்டு ஆங்கில நாளிதழான ஸ்டேட்ஸ்மேனில் தலைமை புகைப்பட கலைஞராக இணைந்தார்.
- அடுத்த 60 ஆண்டுகளில் இந்தியாவின் சமூக-அரசியல் நிலையின் பரிணாம வளர்ச்சியை தனது கேமரா மூலம் அவர் பதிவு செய்தார்.
- அதில் 1972-ஆம் ஆண்டு வங்கதேச அகதி பிரச்னை, 1984-ஆம் ஆண்டு போபால் விஷவாயு பாதிப்பு போன்ற மிக முக்கிய சம்பவங்களை அவர் படம்பிடித்து ஆவணப்படுத்தியது குறிப்பிடத்தக்கவையாகும்.
- 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற வங்கதேச போர், அதன் பின்விளைவுகளைப் படம்பிடித்ததற்காக அவருக்கு பத்மஸ்ரீ விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். ஏராளமான தேசிய மற்றும் சர்வதேச விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.




| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI |
|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 |